TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION
(2024-2026)

(SIXTEENTH ASSEMBLY)

TWENTY SECOND REPORT

(Presented to the Assembly on **23rd JAN 2026**)

Legislative Assembly Secretariat,
Chennai – 600 009.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION
(2024-2026)

(SIXTEENTH ASSEMBLY)

TWENTY SECOND REPORT

Legislative Assembly Secretariat,
Chennai – 600 009.

CONTENTS

			Pages
Composition of the			
	Committee on Delegated Legislation (2024-2026)	**...**	**iii**
PART – I			
	Introduction	**...**	**1**
PART – II			
1.	**The Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)**	**...**	**2**
	The item on which modifications are not recommended by the Committee	**...**	**2**
	Proceedings	**...**	**5-49**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION (2024-2026)

(CONSTITUTED ON 29th JUNE 2024 and extended upto 31.3.2026)

CHAIRMAN

1. Thiru. G.V. Markandayan

MEMBERS

2. Thiru. S.R. Raja
3. Thiru. Ka.So.Ka. Kannan
4. Thiru. A. Krishnaswamy
5. Thiru. N. Thiyagarajan
6. Dr. A.R.R. Raghuramon
7. Thiru. S. Stalin Kumar
8. Thiru. P. Arjunan
9. Thiru. PR. Senthilnathan
10. Thiru. E. Balasubramanian
11. Thiru. E.M. Manraj
12. Dr. (Tmt.) Tharahai Cuthbert

SECRETARIAT

Dr. K. Srinivasan	-------	Principal Secretary
Tmt. P. Thenmozhi	-------	Joint Secretary
Thiru. M. Udaiyarsamy	-------	Deputy Secretary
Thiru. V. Manickam	-------	Under Secretary

REPORT OF THE COMMITTEE ON DELEGATED LEGISLATION

PART – I

INTRODUCTION

I, the Chairman of the Committee on Delegated Legislation having been authorized by the Committee to present this Twenty Second Report on its behalf.

This Report includes some of the observations and decisions of the Committee for the year 2024-2026 based on the consideration of the Memoranda that were placed before the Committee during its meeting held on 25.9.2025 at Udhagamandalam.

SITTINGS OF THE COMMITTEE

The Committee for the year 2024-2026 constituted on 29th June 2024 and extended upto 31.3.2026, it met for 9 days.

ITEMS CONSIDERED BY THE COMMITTEE

The Committee for the year 2024-2026 considered 2 Memoranda (Memo.Nos.140 and 141) covering Rules, Amendment to Rules, and Notifications Laid on the Table.

This Report exclusively deals with amendments to Rules issued under the Laws relating to **Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (TN Act 22 of 1959).** An extract of the Committee's meeting proceedings is also appended to this Report.

The Committee places on record its appreciation of the valuable assistance rendered by the Principal Secretary, Legislative Assembly Secretariat. The Committee is also thankful to the Officers of the Law Department, **Tourism, Culture and Religious Endowments Department** for the co-operation extended to the Committee in its deliberations.

The Committee considered and approved this Report at its meeting held at Chennai-9 on the 22.01.2026.

PART – II

1. THE HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS ACT, 1959 (TAMIL NADU ACT 22 OF 1959)

G.O.(Ms.)No.219, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 2nd September, 2022

In exercise of the powers conferred by clause (xxiii) of sub-section (2) of section 116 of the TN Hindu Religious and Charitable Endowments Act, 1959 (TN Act 22 of 1959), the Government have made the following amendment to the Tamil Nadu Hindu Religious Institutions Employees (Conditions of Service) Rules, 2020:-

The Committee recommended that the notifications issued by the Department should be published in the Government Gazette as soon as possible.

THE ITEM ON WHICH MODIFICATIONS ARE NOT RECOMMENDED BY THE COMMITTEE

G.O.(Ms.)No.260, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 31st October, 2022

Chennai-9,
22th January, 2026,
Thai-8,
Thiruvalluvar Aandu-2057

G.V. MARKANDAYAN
CHAIRMAN

PROCEEDINGS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION

PROCEEDINGS OF THE MEETING

Thursday, the 25th September, 2025

The Committee on Delegated Legislation met at 10-00 a.m. on Thursday, the 25th September, 2025 in the Conference Hall at Tamizhagam Government Guest House, Udhagamandalam.

The following Members were present:

CHAIRMAN

Hon'ble Thiru G.V. Markandayan

MEMBERS

Hon'ble Thiru Ka.So.Ka. Kannan

Hon'ble Thiru A. Krishnaswamy

Hon'ble Thiru S. Stalin Kumar

Hon'ble Thiru E. Balasubramanian

Hon'ble Thiru E.M. Manraj

Hon'ble Dr. (Tmt.) Tharahai Cuthbert

LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT

Thiru M. Udaiyarsamy - Deputy Secretary

Thiru V. Manickam - Under Secretary

During the meeting, Tmt. D. Kavitha, Deputy Secretary to Government, Law Department was also present.

திருமதி எம். வாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி): தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்துள்ள மாண்புமிகு குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களையும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் துணைச் செயலாளர், சார்புச் செயலாளர் மற்றும் அலுவலர்களையும், சட்டத் துறையின் அரசு துணைச் செயலாளர் உள்ளிட்ட அனைவரையும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வருக, வருக என வரவேற்கிறேன்.

(சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் துணைச் செயலாளர் மற்றும் சார்புச் செயலாளர் மற்றும் சட்டத் துறையின் அரசு துணைச் செயலாளர் ஆகியோருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக புத்தகம் மற்றும் தோடர்களின் பாரம்பரியமிக்க துண்டு நினைவுப் பரிசாக வழங்கப்பட்டது.)

திரு. மு. உடையார்சாமி, துணைச் செயலாளர், சட்டமன்றம்: அனைவருக்கும் வணக்கம். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சட்டத் துறையின் அரசு துணைச் செயலாளர் அவர்களுக்கும், நீலகிரி மாவட்ட நிர்வாகம் சார்ந்த அதிகாரிகளுக்கும், சட்ட விதிகள் ஆய்வுக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை புரிந்துள்ள துறை சார்ந்த உயர் அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் முதன்மைச் செயலாளர் அவர்கள் பணி நிமித்தம் காரணமாக இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலவில்லை என்பதைத்

தெரிவித்துக்கொள்வதோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அவசர பணி காரணமாக குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள இயலவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024–2026 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழு இன்று சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை குறித்த 140 மற்றும் 141 ஆகிய இரண்டு குறிப்பாணைகளை ஆய்வு செய்யவுள்ளது.

இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை புரிந்துள்ள மாண்புமிகு குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு குழுத் தலைவர் அவர்களை கூட்டத்தைத் தொடங்கி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் கூட்டம் இன்று நீலகிரி மாவட்டத்தில், ரம்மியமான சுற்றுச்சூழலும், இயற்கை வளமும் நிறைந்த உதகமண்டலத்தில் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை புரிந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்களான அன்பிற்குரிய திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள், திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள், திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள், முனைவர் (திருமதி) தாரகை கத்பட் அவர்கள், திரு. இ.மா. மான்ராஜ் அவர்கள், திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்கள் ஆகியோருக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் துணைச் செயலாளர், சார்புச் செயலாளர் மற்றும்

அலுவலர்களுக்கும், சட்டத் துறையின் அரசு துணைச் செயலாளர் அவர்களுக்கும், நீலகிரி மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும், குழுவின்முன் விளக்கமளிக்க வருகை புரிந்துள்ள சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த காலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் துணைச் செயலாளர் அவர்கள் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை தொடர்பான குறிப்பாணைகளை ஒவ்வொன்றாக விவாதிப்பதற்காக எடுத்துவைப்பார்கள். குழு உறுப்பினர்கள் அக்குறிப்பாணைகள் தொடர்பான தங்களின் கருத்துகளை பகிர்ந்துகொண்டு, மேலான ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன் இக்குழு வடஇந்திய ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, அந்தமான், மேற்கு வங்காளம், டார்ஜிலிங், சிக்கிம் போன்ற இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு, பல்வேறு மாநிலங்களில் இக்குழு எவ்வாறு செயல்படுகிறது, பிற குழுக்கள் எவ்வாறு வெற்றிகரமாக செயல்படுகின்றன என்பன குறித்து ஆய்வு செய்தது.

கடந்த ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திலும் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு, இக்குழு செம்மையாக செயல்படும் வகையில், தங்களின் மேலாக கருத்துகளை தெரிவித்தார்கள். அக்கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டு அதுகுறித்த மூன்று

துறைகளின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு, மேலும் ஒரு துறையின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

ஆகவே, குழு உறுப்பினர்களின் மேலான கருத்துகள் இக்குழுவை வலுவாக நடத்துவதற்கு உறுதுணையாகவும், ஆக்கப்பூர்வமாகவும் இருக்கும் என்று நம்புகிறேன். தற்போது ஒவ்வொரு துறையாக குழு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. வை. மாணிக்கம், சார்புச் செயலாளர், சட்டமன்றம்: முதலாவதாக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்ந்த அதிகாரிகள் குழுவின்முன் விளக்கமளிக்க அழைக்கப்படலாம்.

(சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் அதிகாரிகள் குழுவின்முன் விளக்கமளிக்க அழைக்கப்பட்டனர்.)

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் சார்பாக வருகை புரிந்துள்ள அதிகாரிகள் தங்களை அறிமுகம் செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

The following Officers of the Tourism, Culture and Religious Endowments Department were present:

1. Tmt. S. Poorani,
   Additional Secretary to Government,
   Tourism, Culture and Religious Endowments Department,
   Secretariat, Chennai-9.

2. Thiru P. Ramesh,
   Joint Commissioner,
   Hindu Religious and Charitable Endowments Department,
   Coimbatore.

The deliberations are summarised as under:

துணைச் செயலாளர், சட்டமன்றம்: முதலில், குறிப்பாணை எண் 140/2025–2026, அரசாணை (நிலை) எண் 219, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4(2)) துறை, நாள் 2–9–2022.

MEMORANDUM NO.140/2025-2026

Sub: TN HR&CE Act, 1959 (TN Act 22 of 1959) – Amendment to the Tamil Nadu Hindu Religious Institutions Employees (Conditions of Service) Rules, 2020 – Notification – Issued - Regarding.

*****

G.O.(Ms.)No.219, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 2.9.2022.

* * * * *

In Rule 7(a) of the TN Hindu Religious Institutions Employees (Conditions of service) Rules, 2020, maximum age for appointment by direct recruitment in the religious institutions has been fixed as 35 years.

Originally, appointment of employees in the religious institutions was governed by TN Hindu Religious Institutions (Officers and Servants) Service Rules, 1964. In Rules 5 of the said Rules, maximum age for appointment was prescribed as 45 years.

Pursuant to the order of the Hon'ble High Court dated 22.01.2009 in W.A. Nos.1497 & 1561 of 2005, the said Rule was amended by G.O.Ms.No.255, Tamil Development, Religious endowments and Information (RE4-2) Department, dated 28.6.2010. In the said amendment also the maximum age limit of 45 years was not modified.

Subsequently, TN Hindu Religious Institutions Employees (Conditions of Services) Rules, 2020 have been issued pursuant to the order dated 22.1.2015 passed by the Hon'ble High Court in W.A.No.491 of 2013 in supersession of TN Hindu Religious Institutions (Officers and Servants) Service Rules, 1964. In which, maximum age limit has been reduced from 45 years to 35 years.

In the order dated 22.1.2009 in W.A. Nos.1497 & 1561 of 2005 and order dated 22.1.2015 made in W.A. No.491 of 2013, the Hon'ble High Court has directed to frame comprehensive Service Rules and till then essential posts alone should be filled up subject to framing of Service Rules. In view of the said orders, vacancies in the religious institutions are not filled up for the past 10 years.

Some of the posts require specialized qualifications. Only those have completed courses and undergone training in the relevant field for eligible for appointment to the said posts. The persons who have completed those specialized courses will not get employment in any other place except temples. Due to ban on recruitment for the last 10 years, those persons have crossed the maximum age limit of 35 years as prescribed in the Rule 7(a) of the said Rules.

It has been proposed to increase the maximum age limit from 35 years to 45 years by amending Rule 7(a) suitably.

Accordingly, the following notification has been issued.

NOTIFICATION

G.O.(Ms.)No.219, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 2.9.2022.

In exercise of the powers conferred by clause (xxiii) of sub-section (2) of section 116 of the TN Hindu Religious and Charitable Endowments Act, 1959 (TN Act 22 of 1959), the Government have made the following amendment to the Tamil Nadu Hindu Religious Institutions Employees (Conditions of Service) Rules, 2020:-

AMENDMENT

In the said Rules, in rule 7, for clause (a), the following clause shall be substituted, namely:-

"Age:- No person shall be eligible for appointment by direct recruitment to the posts for which there is a provision for direct recruitment unless he has completed eighteen years of age but has not completed forty-five years of age on the first day of July of the year in which the vacancy is notified."

This notification issued in the G.O.(Ms.)No.219, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 2.9.2022 has been published in the Government Gazette issue No.36/2022 on 7.9.2022. The same has been placed on the Table of the House on 19.10.2022 (Agenda Sl.No.17/2022).

இந்த அரசாணை எதற்காக வெளியிடப்பட்டது என்பதைக் குழுவிற்கு விளக்கவும்.

திரு. P. ரமேஷ், இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: ஏற்கெனவே 1964 ஆம் ஆண்டில் அதிகபட்ச வயது 45

என்றுதான் இருந்தது. அப்போது ஒரு Writ file செய்யப்பட்டபோது இந்து சமய அறநிலையத் துறையின் அனைத்து temple staff-க்கும் rules frame செய்வது குறித்த ஒரு தீர்ப்பினை உயர்நீதிமன்றம் அளித்தது. அந்த Writ–ல் அளித்த தீர்ப்பின்படி நிதித் துறையின் செயலாளர், ஆணையர் மற்றும் ADC ஆகியோர் கொண்ட Rules Committee அமைக்கப்பட்டு அந்தக் குழுவால் அதிகபட்ச வயது 35 என்று நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், Temple staff–ல் நிறைய பேர் தினக்கூலி அடிப்படையில் 10, 15 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் 35 வயதினை அடைந்துவிட்டார்கள். அதனால், 35 வயதான பின்பும் permanent staff ஆக முடியவில்லை என்று temple staff-ன் association–லிருந்து ஒரு கோரிக்கை வைத்தார்கள். அதை அடிப்படையாகக் கொண்டு 2022 ஆம் ஆண்டில் 35 வயது என்றிருந்ததை 45 வயதாக மாற்றி திருத்தம் வெளியிட்டார்கள்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: முன்பு முதுநிலை திருக்கோயில் அல்லாத பணியாளர்கள் குறித்த proviso தற்போது நடைமுறையில் இருக்கிறதா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இருக்கிறது.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: இந்த provision உங்கள் துறைக்கு மட்டுமா அல்லது மற்ற துறைகளுக்கும் பொருந்துமா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இது இந்து சமய அறநிலையத் துறைக்கு மட்டும்தான் பொருந்தும்.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: Temple staff–ஐ இரண்டு வழிகளில் recruit செய்கிறோம். One is through direct recruitment and another is through promotion. இந்த வயது வரம்பு உயர்வு என்பதே promotion–ல் temple staff–ஐயும் உள்ளே கொண்டு வர வேண்டும் என்பதற்காகத்தான் நிர்ணயிக்கப்பட்டது. Temple staff-க்கான rules-ஐ separate ஆக monitor செய்கிறோம்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: இதுகுறித்த உயர்நீதிமன்ற உத்தரவு இருக்கிறதா?

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: உயர்நீதிமன்றத்தின் guidelines இருக்கிறது. ஆனால், அது வயது வரம்பினை நிர்ணயிப்பதாக இல்லை. மாறாக, துறையின் தேவைக்கேற்றாற்போல் வயது வரம்பினை fix செய்துகொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த காலகட்டத்தில் நாதஸ்வரம் வாசிப்பவர்கள், பிற கலைகள், மற்ற essential services செய்பவர்கள் என்று நிறைய பேர் தேர்ச்சி பெற்று வருகிறபோது அவர்கள் அந்த வயது உச்சவரம்பைக் கடந்துவிடுகிறார்கள். அதனால், அவர்களுக்கு promotion வராமல் போய்விடுகிறது. அதனால்தான் அதிகபட்ச வயதினை 45 என நிர்ணயம் செய்தோம்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: நீங்கள் சொல்வதெல்லாம் சரி. Is it valid now?

ADDITIONAL SECRETARY TO GOVERNMENT, TOURISM, CULTURE AND RELIGIOUS ENDOWMENTS DEPARTMENT: Yes, it is valid now, Sir.

THIRU E. BALASUBRAMANIAN: Then, we can consider it.

தலைவர்: இந்த அறிவிக்கையில் உள்ள corrections-ஐதான் நாம் பார்க்கிறோம். பேரவையில் ஏற்கெனவே amendment pass ஆகிவிட்டது. தற்போது அதற்கான அறிவிக்கைதான் வந்திருக்கிறது. அதிலுள்ள corrections-ஐ மட்டும்தான் பார்க்கிறோம்.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: ஊட்டியிலுள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் typist ஆக பணிபுரியும் 44 வயதுடையவர் வயது வரம்பினை உயர்த்தியதால் பயன்பெற்றிருக்கிறார். அதேபோல், ஊட்டியிலுள்ள ஆஞ்சிநேயர் கோயிலில் பணிபுரியும் 43 வயதுடைய திருமதி ரம்யா என்பவரும் பயன்பெற்றிருக்கிறார்.

திரு. இ.மா. மான்ராஜ்: தமிழ்நாடு முழுவதும் எத்தனை பேர் இதனால் பயனடைந்திருக்கிறார்கள்?

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: சரியான எண்ணிக்கை என்னிடம் தற்போது இல்லை. முக்கியமாக, musical instruments-ஐ கையாள்பவர்கள் கோயிலில் பள்ளி நடத்துகிறார்கள். அதுபோன்ற பள்ளிகளில் படித்துவிட்டு வருபவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இது செய்யப்பட்டது.

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: Original ஆக 45 வயது என்றுதான் இருந்தது. விதிகளை வரையறுக்கும்போது 35 என்று துறையால் குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு comprehensive service rules frame செய்ய வேண்டுமென்பதுதான் உயர்நீதிமன்றத்தின் direction. அந்த direction-ல் age limit குறித்து சொல்லப்படவில்லை. அதனால், இதனை ஆய்வு செய்து

பார்க்கும்போது original position-க்குதான் துறை சென்றிருக்கிறது என்று தெரிகிறது. மேலும், comprehensive service rules frame செய்யும் வரை substantial ஆக எந்த vacancy-ஐயும் நிரப்பக்கூடாது என்று உயர்நீதிமன்றம் சொல்லிவிட்டது. அதனால், 10 ஆண்டுகள் gap ஆகிவிட்டது. இதனால் உயர்நீதிமன்றத்தின் direction எதுவும் violate ஆகவில்லை.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: இப்போது automatic ஆக அவர்களுக்கு இந்தப் பயன் கிடைக்குமா?

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: ஆம். தற்போது விதிகளின்படி recruitment செய்கிறார்கள். 10 ஆண்டுகள் gap ஏற்பட்டுள்ளதால், அவர்கள் suffer ஆகக்கூடாது என்பதற்காக 45 என்று வயது உச்சவரம்பினை நிர்ணயித்தார்கள்.

தலைவர்: இந்த மாற்றத்தை கோயில் பணியாளர்களின் நலனுக்காகவும், அவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடும் நீங்கள் செய்திருக்கிறீர்கள். ஆனால், அவர்களை ஓய்வூதியத்திற்காகவும், பிற பயன்களுக்காகவும் மிகவும் அலைய வைக்கிறீர்கள். அவர்கள் consolidated ஆக ரூ.2,000/– அல்லது ரூ.4,000/– தான் வாங்குகிறார்கள். ஆனால், அந்தக் கோப்புகளை clear செய்வதற்கு மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. இதுபோன்ற காலதாமதம் ஏற்படாமல் இருப்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும். நீங்கள் அவர்களை regularise செய்து உங்கள் துறையின் பணியாளர்களாக consider செய்கிறீர்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பின்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய

தொகையைப் பெறுவதற்காக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் சம்பளமும் மிகவும் குறைவாக உள்ளது.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: அவர்களின் சம்பளம் முதலில் குறைவாக இருந்தது. ஆனால், 7–வது ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2020–லிருந்து அதிகப்படுத்தியிருக்கிறோம்.

தலைவர்: அரசு பணியாளர்களின் scale of pay–வைப் போலவே அவர்களுக்கும் கொடுங்கள்.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: சரி.

தலைவர்: உங்கள் துறை சார்ந்த உதவியாளர், இளநிலை உதவியாளர், regularize செய்யப்பட்ட தபேலா, நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகளை வாசிக்கும் பணியாளர்கள் ஆகியோருக்கு என்ன சம்பளம் வழங்கப்படுகிறது? பணி ஓய்வு பெற்ற பிறகு, அவர்களுக்கு எவ்வளவு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது?

(அவ்வமயம் உதகமண்டலத்தில் உள்ள கோயிலில் பணிபுரியும் பணியாளர் ஒருவர் குழுவின்முன் அழைத்துவரப்பட்டார்.)

திரு. ஆ. கிருஷ்ணசாமி: தாங்கள் எந்தக் கோயிலில் பணிபுரிகிறீர்கள்? எந்தப் பணியில் உள்ளீர்கள்?

திரு. சதீஷ்குமார், கோயில் பணியாளர்: நான் உதகமண்டலத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் நாதஸ்வரம் வாசிக்கும் பணியில் உள்ளேன்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: தங்களுக்கு வழங்கப்படும் மாத சம்பளம் எவ்வளவு?

திரு. சதீஷ்குமார், கோயில் பணியாளர்: நான் தற்போது மாதம் ரூ.22,000/- சம்பளம் பெறுகிறேன்.

தலைவர்: பணி ஓய்வு பெற்ற பிறகு இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா? Honorarium ஆக ஒரு குறிப்பிட்ட தொகை ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் என்று நினைக்கிறேன்.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இவர்களுக்கு regular pension வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்களின் எதிர்கால நலன் கருதி அவர்களது மாத சம்பளத்திலிருந்து employees' contribution ஆக ஒரு குறிப்பிட்ட தொகை பிடித்தம் செய்யப்பட்டு employer's contribution உடன் Employees Provident Fund-ல் சேமிக்கப்படும். தொழிலாளர்களின் பணி ஓய்விற்குப் பிறகு, இத்தொகையிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகை ஓய்வூதியமாக வழங்கப்படும்.

தலைவர்: இவர்களுக்கு regular pension கிடையாது; EPF-ல் சேமிக்கப்பட்ட தொகையிலிருந்து ஓய்வூதியமாக மாதம் ரூ.2,000/- அல்லது ரூ.3,000/- வழங்கப்படுகிறது.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: அத்தொகை தற்போது ரூ.5,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தலைவர்: இந்து சமய அறநிலையத் துறை தவிர்த்து மற்ற துறைகளில், ஒரு பணியாளர் பணிஓய்வு பெற்றால், ஓய்வூதியப் பலன்கள் குறித்த கோப்புகள் clear ஆகி அடுத்த மாதத்திலிருந்தே அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

அங்கன்வாடி பணியாளர்களுக்குக்கூட பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, மாதம் ரூ.2,000/- வழங்கப்படுகிறது. ஆனால், இந்து சமய அறநிலையத் துறையில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: ஒரு பணிக்கு இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து No objection certificate வாங்க வேண்டுமென்றாலும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஒரு வருடம் கழித்து தற்போதுதான் ஆணையர் அவர்களை சந்தித்து அதனைப் பெற்றேன். வேறு எந்தத் துறையிலும் இத்தகைய காலதாமதம் ஏற்படுவதில்லை.

தங்கள் தொகுதியில் உள்ள கோயில்களில் அன்னதானம் செய்தல், கொடிக்கம்பம் கட்டுதல் போன்ற பணிகளை செய்யும்போது, சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இந்து சமய அறநிலையத் துறையிடம் தெரிவித்துவிட்டு செய்கிறார்கள். ஆனால் தொகுதியில் நடைபெறும் கோயில் விழாக்கள் குறித்த தகவல்களை துறையினர் அத்தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில்லை.

தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்மநாபபுரம் அரண்மனையிலிருந்து கேரளாவின் திருவனந்தபுரத்திற்கு, மாநிலத்தின் ஆண்டு விழாக்களுக்காக சரஸ்வதி தேவி, வேலிமல குமார சுவாமி போன்ற சிலைகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவது நவராத்திரி பண்டிகையாக கொண்டாடப்படுகிறது. அவ்விழாவின்போது ceremonial sword எனப்படும் உடைவாள் இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கேரளாவில் handover

செய்யப்படும். இரண்டு தொகுதிகளைக் கடந்து இவ்வாள் எடுத்துச் செல்லப்படுகிறது; இது பத்து நாட்கள் நடைபெறும் விழா; இதில் இலட்சக்கணக்கான மக்கள் இரவு, பகலாக கலந்துகொள்கின்றனர். முந்தைய தினம் எனது தொகுதியில் நடைபெற்ற அவ்விழா குறித்து எனக்கு எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. அவ்விழா குறித்து தெரிந்துகொண்டு நானே சென்று அதில் கலந்துகொண்டேன். தமிழ்நாட்டின் கலாசாரமும் கேரள மாநிலத்தின் கலாசாரமும் இணையக்கூடிய இவ்விழா ஒவ்வொரு வருடமும் விமரிசையாக நடைபெறுகிறது. இத்தகைய பெருமைமிக்க இப்பண்டிகை குறித்த தகவலை சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்ற உறுப்பினருக்கு தெரிவிக்கவில்லை. இதனால் அரசுக்கும் அவப்பெயர் ஏற்படுகிறது. உடைவாளை பெற்றுக்கொள்ளும் இவ்விழாவில் கேரள மாநிலத்திலிருந்து அனைத்து அமைச்சர்களும், ஆளுநரும் கலந்துகொண்டனர். ஆனால், அதனை handover செய்ய தமிழ்நாட்டிலிருந்து இந்து சமய அறநிலையத் துறையின் இணை ஆணையர் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினராகிய நான் மட்டுமே கலந்துகொண்டோம்.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: இது குறித்து ஆணையரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: இத்துறையில் மூன்று மாவட்டத்திற்கு ஒரு இணை ஆணையர் என பணியமர்த்தப்பட்டுள்ளதால் இவர்களை தொடர்புகொள்வது மிகவும் சிரமமாக உள்ளது. கோயில் சம்பந்தமான பணிகளுக்கு இணை ஆணையர், துணை ஆணையர் உள்ளிட்ட எந்த அதிகாரியையும் சந்திக்க

முடிவதில்லை. **திரு. இ.மா. மாண்ராஜ்:** இத்துறையின்மீது நிறைய வழக்குகள் தொடுக்கப்படுவதால், இதுசம்பந்தமாக இவர்கள் அடிக்கடி நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டியுள்ளது.

தலைவர்: பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இணை இயக்குநர் அளவிலும், இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் இணை ஆணையர் அளவிலும் வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. Assistant Commissioner level-ல் நீதிமன்றத்திற்கு சென்றால், District level-ல் உள்ள உயர் அதிகாரியை வரச் சொல்கிறார்கள். Joint Commissioner செல்லவில்லையென்றால் Commissioner அல்லது துறைச் செயலாளரை நீதிமன்றத்திற்கு வரச் சொல்கிறார்கள். சமீபத்தில் பள்ளிக்காக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தை மாற்றிக் கொடுக்குமாறு உயர்நீதிமன்றத்தில் Christian management தொடுத்த வழக்கைத் தொடர்ந்து, பள்ளிக் கல்வித் துறையின் செயலாளர், வருவாய்த் துறையின் செயலாளர், ஆணையர் உள்ளிட்ட உயரதிகாரிகள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று directions வழங்கப்பட்டுள்ளது. இதனால் இவர்களின் அன்றாட வேலை பாதிக்கப்படுகிறது.

இந்து சமய அறநிலையத் துறைக்கு எதிராக இதுபோன்று நிறைய வழக்குகள் தொடுக்கப்படுவதால் Joint Commissioner நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இணை ஆணையரை சந்திக்க இயலவில்லை, தொகுதியில் நடைபெறும் கோயில் விழாக்கள் குறித்த தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்பன போன்ற பிரச்சினைகளைக் களைய, Joint

Commissioner அலுவலகத்தில் இல்லாத சூழ்நிலையில், தகவல் பரிமாற்றத்திற்கு Assistant Commissioner level–ல் ஒருவரை பணியமர்த்த வேண்டும்.

திரு. இ.மா. மான்ராஜ்: இணை ஆணையர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பணிச்சுமை காரணமாக இந்து சமய அறநிலையத் துறையின் சில பணிகளில் சுணக்கம் ஏற்படுகிறது என நினைக்கிறேன். எனது தொகுதியில் 40 வருடங்களுக்கு முன்பு இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான இடத்தை வாங்கி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, அதில் கிட்டத்தட்ட 300 குடும்பங்கள் குடியிருந்து வருகின்றன. பின்னர் அவ்விடம் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமானது என்று மாற்றி கொடுக்கப்பட்டது. இவ்விடத்திற்குரிய சர்வே எண்ணில் உள்ள பிரச்சினை காரணமாக நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. இவ்வழக்கு தொடர்பாக இரண்டு வருடங்களுக்கு முன்பு அனுப்பப்பட்ட கோப்பு Executive Officer–யிடமிருந்து Joint Commissioner–க்குச் சென்று, பின் அது Commissioner அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது.

தலைவர்: முந்தைய காலகட்டத்தில் தர்மகர்தாக்கள் நிறைய பேர் கும்பாபிஷேகம் செய்வது, நிதியுதவி செய்வது போன்ற தர்மகாரியங்களைச் செய்தார்கள். இவர்கள் சில பிரச்சினைகள் காரணமாக நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டி வந்தது. உதாரணமாக, ஸ்ரீரங்கம் கோயிலிலுள்ள புராதனமான, கலைநயமிக்க சிலைகள் எடுக்கப்பட்டு அவற்றுக்குப் பதிலாக வேறு சிலைகள் வைக்கப்பட்டதாக TVS Motor நிறுவனத்தின் தலைவர்மீது வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கோயிலின் front gate கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக கழட்டி வைக்கப்பட்டு, துருபிடித்துவிட்டது. அதனால் அவர் ரூ.90 இலட்சம் செலவழித்து gate செய்துகொடுத்தார். பிறகு ஆர்.எஸ்.எஸ். அமைப்பினையோ, இந்து முன்னணியையோ சேர்ந்த ஒருவர், அந்த gate-ல் பல நவரத்தினங்களும், விலை உயர்ந்த கற்களும் பதிக்கப்பட்டிருந்தன என்று கூறி ஒரு வழக்கு தொடர்ந்தார். இதற்கு யார் பதில் சொல்ல வேண்டியிருக்கிறதென்றால் இவர்கள்தான். மற்றுமொரு உதாரணத்தையும் நான் சொல்கிறேன். 1958–ல் இந்து சமய அறநிலையத் துறைக்கென்று தனி ஆணையரகம் கிடையாது. வருவாய்த் துறையின் செயலாளர்தான் இந்து சமய அறநிலையத் துறையையும் கவனித்துக்கொண்டிருந்தார்.

அந்த காலத்தில் ஆலந்தூரில் மாதவபெருமாள் கோயில் என்ற கோயிலுக்கு சொந்தமான இடத்தில் அரசாங்கம் ஒரு layout போட்டு, approval கொடுத்தது. அதற்கு வருவாய்த் துறை செயலாளர்தான் கையெழுத்திட்டிருந்தார். Town and Country Planning layout போட்டு கொடுத்தாகிவிட்டது. அதில் apartment கட்டிவிட்டார்கள். ஆனால், பிறகு RERA-வின்கீழ் fine போடுகிறார்கள். இந்து சமய அறநிலையத் துறையில் NOC வாங்கிவர சொல்கிறார்கள். 10 ஆண்டுகளாகியும் இன்னமும் NOC கிடைக்கவில்லை. எல்லா ஆவணங்களும் தெளிவாக உள்ளன; அரசாங்கமே வருவாய்த் துறையின்மூலம் layout போட்டு approval கொடுத்த ஓர் இடத்திற்கு இந்த நிலைமை உள்ளது. இதற்குக் காரணம், நீதிமன்றத்தில் பல்வேறு தடையாணைகள் இருப்பதுதான். நாம் அதுகுறித்து விவாதித்தால் நீண்ட விவாதமாக செல்லும்.

திரு. இ.மா. மான்ராஜ்: 40 ஆண்டுகளாகப் பயன்பாட்டில் இருந்த ஓர் இடத்தில் ஒரு எண்ணை சேர்த்ததன் விளைவாக 10 ஆண்டுகளாக எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறது. நீதிமன்றத்தில் order வாங்கியும் 2 ஆண்டுகளாக ஆணையரகத்தில் NOC கொடுக்க மறுக்கிறார்கள். இது Housing Board-ன்கீழ் வரும் இடம், இந்து சமய அறநிலையத் துறையைச் சேர்ந்தது இல்லை என்று EO மற்றும் JC கூறிவிட்டார்கள். ஆனாலும், ஆணையரகத்திலேயே 2 ஆண்டுகளாக கோப்பு நிலுவையில் இருக்கிறது. இதனால் அந்த இடத்தை வைத்து கடன் வாங்க முடியவில்லை, அடமானம் வைக்க முடியவில்லை, விற்க முடியவில்லை என்று அந்த மக்கள் போராடுகிறார்கள்.

தலைவர்: இதற்கு முன்பு கோயில் இடங்களில் அரசு மருத்துவமனைகளோ, கல்வி நிறுவனங்களோ கட்டுவதற்கு NOC கொடுத்தார்கள். ஆனால், இப்போது கொடுப்பதில்லை. தனி நபருக்கு auction-க்கு விட்டு வாடகை முறையில் கொடுக்கலாம். ஆனால், வேறு எந்த அரசு துறைகளுக்கும் கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. இது அரசின் கொள்கை முடிவு. அரசாங்க அளவில், அமைச்சர் அளவில் எடுக்கப்படும் முடிவு. வழக்குக்கு பயந்து மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் துறையால் எடுக்க முடிவதில்லை.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. ஒரு நிலத்தில் 100 ஆண்டுகளாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியை விற்கலாம் என்றால் ஆவணங்களில் UDR re-survey-க்கு முன்பு private land என்று இருந்தது, இப்போது பார்த்தால் கோயில் நிலம் என்று இருக்கிறது. யார் இவ்வாறு செய்தார்கள் என்று கேட்டால் யாருக்கும்

தெரியவில்லை. தனி நபர் பத்திரம் வைத்திருக்கிறார். அந்த நிலத்தை விற்பதற்கோ, அதில் கட்டுமானம் மேற்கொள்வதற்கோ அனுமதி கேட்டால் அனுமதி கிடைப்பதில்லை. இந்து சமய அறநிலையத் துறையிலும் அவர்களுக்கு சொந்தமான இடம் என்பதைக் குறிக்க பத்திரம் எதுவும் இல்லை. பத்திரமே இல்லாமல் எப்படி அது கோயில் சொத்து என்று கூறுகிறார்கள்?

திரு. ஆ. கிருஷ்ணசாமி: அந்த காலத்தில் கணக்குப்பிள்ளை எழுதுவதுதான் குறிப்பு. அதற்கு ஆதாரம் எதுவும் இருக்காது.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: இதற்கு என்னதான் தீர்வு?

திரு. இ.மா. மான்ராஜ்: தமிழ்நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இவ்வாறு இருக்கின்றன.

தலைவர்: ஆயிரக்கணக்கு இல்லை, இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன.

திரு. இ.மா. மான்ராஜ்: என்னுடைய தொகுதியில் 500 ஏக்கருக்கு மேல் இவ்வாறு இருக்கிறது.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இது இனாமாக வழங்கப்பட்ட நிலமாக இருக்கும். The Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963, Section 8(2)–ன்கீழ் கொடுத்திருப்பார்கள். Settlement order இருந்திருக்கும். அதைப் பார்க்காமல் வாங்கியிருப்பார்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: Proper ஆன Title Deed தனி நபரிடம்தான் இருக்கிறது என்றால் என்ன செய்வது?

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: எங்கள் DRO–வின் மூலமாக கேட்டதற்கு, இந்து சமய அறநிலையத் துறையில் இதுகுறித்த எந்த ஆவணமும் இல்லை என்று கூறுகிறார்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: பூந்தமல்லியில் மெயின் ரோட்டில் 4 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் அந்த இடத்தில் ஓர் ஓரமாக சித்தி விநாயகர் கோயில் கட்டினார். இப்போது அதை விற்கப் போனால் அந்த நிலத்தை சித்தி விநாயகர் டிரஸ்ட் என்று குறிப்பிட்டிருப்பதால் விற்க முடியாது என்று கூறுகிறார்கள்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: நான் சொல்லும் இடம் மாரியம்மன் கோயிலுக்கு சொந்தமான இடம் என்று இருக்கிறது. ஆனால், அங்கு மாரியம்மன் கோயிலே இல்லை.

தலைவர்: தற்போது அந்த இடத்தின் possession யாரிடம் இருக்கிறது? அரசாங்கம் ஏதும் documentation செய்துகொடுத்திருக்கிறதா?

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: இல்லை.

தலைவர்: 1967–ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு என்னுடைய தொகுதியில் வில்வமரத்துப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு நபருக்கு 2 ஏக்கர் வீதம் 560 ஏக்கரைப் பிரித்து பட்டா கொடுத்தார்கள். நிலமற்ற விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்து வழங்கப்பட்ட நிலங்கள் அவை. கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் ஆன பிறகு, சமீபத்தில் 3 மாதங்களுக்கு முன்பு பட்டாவை இரத்து செய்து மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் பெயருக்கு பட்டா

மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் பட்டா கொடுத்த இடம் இது. Possession-னும் இல்லாமல், ownership title-லும் இல்லாமல் துறை claim செய்கிறது. ஒருவர் represent செய்ததைத் தொடர்ந்து எந்த ஆவணத்தையும் பார்க்காமல், பட்டாவை இரத்து செய்து கோயில் நிலமாக எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். மகாபலிபுரத்தில் two-Judge Bench ஒரு வழக்கில் suo motu-வாக இதை முடிவு செய்திருக்கிறார்கள். இந்த மாதிரி இலட்சக்கணக்கான விஷயங்கள் இருக்கின்றன.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண High Level Committee form செய்யுமாறு அரசாங்கத்திற்கு recommend செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான சட்டமுன்வடிவையும் பேரவையில் கொண்டு வர வேண்டும்.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: எங்கள் மாவட்டத்தில் நிறைய பேரிடம் செம்புப் பட்டயம் இருக்கிறது. நிலம் தங்களுக்கு சொந்தம் என்பதற்கு அதுதான் ஆதாரமாக இருக்கிறது. ஆனால், இப்போது அந்த நிலங்கள் எல்லாம் அரசுக்கு சொந்தம் என்று சொல்கிறார்கள். அந்த மக்கள் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளாக அந்த நிலத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அங்கு வீடுகள்தான் உள்ளனவே தவிர, கோயில் இல்லை. அது மார்த்தாண்டவர்ம ராஜா மக்களுக்கு கொடுத்த இடம்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: பிரிட்டிஷ் காலத்திற்கு முன் அல்லது பிரிட்டிஷ் காலத்தில் தாமிரம் அல்லது செம்புப் பட்டயம் வாயிலாக இனாமாக நிலத்தைப் பெற்றிருந்தால், தற்போது survey number வழங்கப்படுவதுபோல அந்த காலத்தில்

அதற்கு pymaash number வழங்கப்பட்டது; இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அது survey number ஆக வழங்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு, The Tamil Nadu Minor Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 கொண்டுவரப்பட்டு, pymaash number உள்ள நிலத்தை குறிப்பிட்ட தேதிக்குள் அரசுக்கு விண்ணப்பித்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு மாற்றிக்கொள்ளப்படாத நிலங்கள், பெரிய நகரத்தில் உள்ள 2, 3 ஏக்கர் கொண்ட இடமாக இருந்தாலும், இன்றளவும் அப்படியே இருக்கின்றன; வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதில் தெரிவித்தவாறு, survey number ஆக மாற்றிக்கொள்ளாத காரணத்தால் அந்நிலத்திற்கு உரிமை கோர முடியவில்லை.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: பின்னர் 1984 வரையில் இனாமாக வழங்கப்பட்ட நிலத்தின்மீது நில உரிமைதாரர்கள் உரிமை கோரலாம் என்று வழிவகை செய்யப்பட்டது. 1984 ஆம் ஆண்டு வரையில் அவ்வாறு உரிமை கோரப்படாத நிலங்கள் அனாதீன நிலம் என்று நிலப் பதிவேட்டில் பதியப்பட்டன. இது சம்பந்தமாக தொடுக்கப்பட்ட வழக்கில், நீதிமன்றமும் "You may consider this case on merits" என்று அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. இருப்பினும் அரசு இதுவரையில் ஒரு சென்ட் நிலத்தைக்கூட நீதிமன்றத் தீர்ப்பின்படி உரிமைதாரர்களுக்கு வழங்கவில்லை; வழங்கமுடியாத சூழ்நிலைதான் உள்ளது.

தலைவர்: அரசு புறம்போக்கு நிலங்களைவிட தமிழ்நாட்டில் அனாதீன நிலங்கள் நிறைய உள்ளன. திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில்தான் இத்தகைய அனாதீன நிலங்கள் நிறைய உள்ளன.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: தமிழ்நாட்டிலேயே ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகமான புறம்போக்கு நிலங்கள் உள்ளன.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: இது சம்பந்தமாக குழு பரிந்துரை செய்தால்தான் இதற்கு தீர்வு கிடைக்கும். அரசு இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: குறிப்பாணை எண் 140–ஐப் பொறுத்தவரையில், அறிவிக்கையின் தமிழ் version–ல் "2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய நிறுவனங்களின்" என்பதற்குப் பதிலாக "தமிழ்நாடு 2020 ஆம் ஆண்டு இந்து சமய நிறுவனங்களின்" என்றுள்ளது. அது திருத்தப்பட வேண்டும்.

ஓர் அரசாணை வெளியிடப்பட்டால் அது எந்த தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது என்று அறிவிக்கையில் குறிப்பிடப்பட வேண்டுமா என்பதை சட்டத் துறையின் அரசு துணைச் செயலாளர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: அறிவிக்கை அரசிதழில் வெளியிடப்படும் நாளிலிருந்து அவ்வரசாணை நடைமுறைக்கு வரும். அதுகுறித்து அறிவிக்கையில் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. முன்தேதியிட்டு நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமெனில் கண்டிப்பாக தேதி குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறு முன்தேதியிட்டு நடைமுறைக்கு கொண்டு வரும் நேர்வில் "This notification shall be deemed to have come into force with effect from" என்று தேதியைக் குறிப்பிட வேண்டும். அவ்வாறன்றி

உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்றால் தேதியை குறிப்பிட வேண்டியதில்லை; Government gazette–ல் வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Notification issue செய்து இவ்வளவு காலத்திற்குள் Government gazette–ல் publish செய்ய வேண்டுமென்று ஏதேனும் time limit உள்ளதா?

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: முக்கியமான இனங்களை அன்றைய தேதியிலேயே அரசிதழில் வெளியிட்டு அன்றைக்கே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்றால் அறிவிக்கை Extraordinary Gazette–ல் publish செய்யப்படுகிறது. அதாவது, ஏதேனும் காரணத்திற்காக அன்றைக்கே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்று துறை நினைத்தால் notification–ஐ Extraordinary Gazette–ல் publish செய்வார்கள். Ordinary Gazette–ல் publish செய்யலாம் என்று துறை நினைத்தால், அரசாணையை Works Manager–க்கு அனுப்பி, Weekly Gazette–ல் publish செய்யலாம். Ordinary Gazette–ல் புதன்கிழமைகளில் அறிவிக்கைகள் publish செய்யப்படுகின்றன.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Ordinary Gazette–ல் publish செய்ய நினைத்தால் இந்த வாரம் அல்லது அடுத்த வாரம், அதாவது குறைந்தது 15 நாட்களுக்குள் publish செய்யலாம். ஆனால் அறிவிக்கையை அரசிதழில் வெளியிடாமல் மாதக் கணக்கில் வைத்திருக்கலாமா?

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: அது தவறு. அரசாணை பிறப்பிக்கும்போதே பெறுநர் முகவரியில் Works Manager, Government Central

Press என்பதைக் கண்டிப்பாக சேர்க்க வேண்டும். அவ்வாறு சேர்த்தால் அது Works Manager–க்கு despatch ஆகி Ordinary Gazette–ல் publish ஆகும். பெரும்பாலும் துறையால் வெளியிடப்படும் அரசாணைகளில் Works Manager, Government Central Press–க்கு முகவரியிடாமல் omit செய்துவிடுவதால் அரசிதழில் வெளியிடப்படாமல் போய்விடுகிறது.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: எரிசக்தித் துறையில் அறிவிக்கையை அரசிதழில் வெளியிடுவதற்கு 6 மாதங்கள், 7 மாதங்கள் என காலதாமதம் செய்துள்ளனர்.

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: அவ்வாறு காலதாமதம் செய்வது தவறு. 20 வருடங்களாக அறிவிக்கைகள் அரசிதழில் வெளியிடப்படாத சில நேர்வுகளும் உள்ளன.

தலைவர்: சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் சட்டத் துறையுடன் கலந்தாலோசித்து இதனை regulate செய்ய வேண்டும்.

The Committee recommended that the notifications issued by the Department should be published in the Government Gazette as soon as possible.

No other modifications were recommended.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: அடுத்து குறிப்பாணை எண் 141/2025–2026, அரசாணை (நிலை) எண் 260, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4(2)) துறை, நாள் 31–10–2022.

MEMORANDUM NO.141/2025-2026

Sub: Rules – TN HR&CE Act, 1959 (TN Act 22 of 1959) – Management and Preservation of Properties of Religious Institutions Rules – Amendments – Notification – Issued - Regarding.

*****

G.O.(Ms.)No.260, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 31st October, 2022

The Management and Preservation of Properties of Religious Institutions Rules have been framed under Section 116(2)(xvii) of the Tamil Nadu HR&CE Act, 1959 for the preservation, conservation, maintenance and management of properties and buildings of the Religious Institutions. Under Rule 2 of the said Rule, appropriate authority in respect of sanction of estimate and tenders for the execution of any works has been defined based on the value of the estimate. The monetary limit was fixed to the Joint Commissioner and other authorities in the year 2001. The monetary limit for Commissioner has been enhanced from Rs.50,00,000/- to Rs.1,00,00,000/- in the year 2008.

Many works related to repair and renovation of temples, providing basic amenities to the devotees and other works are being undertaken in the Religious Institutions. The present monetary limit, in respect of according administrative sanction, for the Officers in the Department is very low when compared to the raising cost of the materials and the cost of construction works. These monetary limits were fixed long back, and hence need to be revised taking into account the present day cost of materials. In view of the low monetary value limits, all the proposals have to come either to the Commissioner or to the Government for approval, causing undue delay in starting the work. This leads to revision of estimates, due to escalation of price and delay the execution of works.

General Public, Devotees and the Executive Authorities of the Religious Institutions need to travel to Chennai for getting approval of the work if it exceeds Rs.5,00,000/-. Considering the prevailing price index, even for carrying out minor repairs in the temples, the cost of the estimate will exceed Rs.5,00,000/-. Therefore, for effective and speedy implementation of works, more power shall be given to subordinate Officers by raising the monetary limits fixed under rule 2 and 23 of the Management and Preservation of Properties of Religious Institutions Rules, 1963. Accordingly, it is proposed to amend the rule 2 and 23 of the said rules suitably.

The following Notification is intended to give effect to the above decision in the best interest of the Thiruppani works of Religious Institutions:-

G.O.(Ms.)No.260, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 31st October, 2022

In exercise of the powers conferred by sub-section (1) read with clause (xxii) of sub-section (2) of section 116 of the TN HR&CE Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959), the Government have made the following amendments to the Management and Preservation of Properties of Religious Institutions Rules:-

AMENDMENTS

In the said Rules,-

(1) in rule 2, for sub-rule (i), the following sub-rule shall be substituted, namely:-

"(i) "appropriate authority" means-

(a) the Government in respect of all religious institutions, if the estimated cost of the works exceeds Rs.1,00,00,000/-;

(b) the Commissioner in respect of all religious institutions, if the estimated cost of the works exceeds Rs.15,00,000/- but does not exceed Rs.1,00,00,000/-;

(c) The Joint Commissioner,-

(i) in respect of all religious institutions included in the list published under sections 46(i), 46(ii) and 46(iii) of the Act, if the estimated cost of the works does not exceed Rs.15,00,000/-;

(ii) in respect of all religious institutions not published under section 46 of the Act, if the estimated cost of the works exceeds Rs.5,00,000/- but does not exceed Rs.15,00,000/-;

(iii) in respect of religious institutions having Executive Officer in the cadre of Deputy Commissioner, if the estimated cost of the works exceeds Rs.10,00,000/- but does not exceed Rs.15,00,000/-;

(iv) in respect of religious institutions having Executive Officer in the cadre of Assistant Commissioner, if the estimated cost of the works exceeds Rs.5,00,000/- but does not exceed Rs.15,00,000/-;

(d) the Executive Officer concerned in respect of religious institutions having an Executive Officer in the cadre of Joint Commissioner, if the estimated cost of the works does not exceed Rs.15,00,000/-;

(e) the Executive Officer concerned in respect of religious institutions having an Executive Officer in the cadre of Deputy Commissioner, if the estimated cost of the work does not exceed Rs.10,00,000/-;

(f) the Assistant Commissioner having jurisdiction in respect of religious institution not published under section 46, if the estimated cost of the work does not exceed Rs.5,00,000/-;

(g) the Executive Officer concerned in respect of religious institutions having an Executive Officer in the cadre of Assistant Commissioner, if the estimated cost of the work does not exceed Rs.5,00,000/-;

(h) the Executive Officer concerned in respect of religious institutions having an Executive Officer in the cadre of Grade I to IV, if the estimated cost of the work does not exceed Rs.2,00,000/-;"

(2) in rule 23, for the table, the following table shall be substituted, namely:-

"

Monetary limit in Rupees	Technical authority competent to scrutinize tenders	Appropriate authority to approve tenders
(1)	(2)	(3)
Upto Rs.2,00,000/-	Assistant Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	1. In the case of religious institutions having an Executive Officer, the Executive Officer concerned. 2. In the case of religious institutions, published under section 46 of the Act and not having an Executive Officer, the jurisdictional Joint Commissioner concerned. 3. In the case of religious institutions, not published under section 46 and not having an Executive Officer, the jurisdictional Assistant Commissioner concerned.

Above Rs.2,00,000/- Upto Rs.5,00,000/-	Assistant Executive Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	1. In the case of religious institutions, having an Executive Officer in the cadre of Joint Commissioner, Deputy Commissioner & Assistant Commissioner, the Executive Officer concerned. 2. In the case of religious institutions, published under section 46 of the Act, the jurisdictional Joint Commissioner concerned. 3. In the case of religious institutions, not published under section 46, the jurisdictional Assistant Commissioner concerned.
Above Rs.5,00,000/- Upto Rs.10,00,000/-	Assistant Executive Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	1. In the case of religious institutions, having an Executive Officer in the cadre of Joint Commissioner, Deputy Commissioner, the Executive Officer concerned. 2. In the case of all other religious institutions, the jurisdictional Joint Commissioner concerned.
Above Rs.10,00,000/- Upto Rs.15,00,000/-	Executive Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	1. In the case of religious institutions, having an Executive Officer in the cadre of Joint Commissioner, the Executive Officer concerned. 2. In the case of all other religious institutions, the jurisdictional Joint Commissioner concerned.

Above Rs.15,00,000/- Upto Rs.1,00,00,000/-	Superintending Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	The Commissioner of Hindu Religious and Charitable Endowments Department.
Rs.1,00,00,001/- and above	Chief Engineer of the Hindu Religious and Charitable Endowments Department	The Tender Award Committee constituted by the Government.

This notification issued in the G.O.(Ms.)No.260, Tourism, Culture and Religious Endowments (RE4-2) Department, dated 31.10.2022 has been published in the Government Gazette issue No.46/2022 on 16.11.2022. The same has been placed on the Table of the House on 12.1.2023 (Agenda Sl.No.13/2023).

இவ்வரசாணை குறித்து குழுவிற்கு தெளிவுபடுத்தவும்.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: கோயில் திருப்பணிகளை மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்குவதற்கு செயலாளர், ஆணையர் மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு எவ்வளவு powers delegate செய்வது என்பது குறித்து இவ்வரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 2008 ஆம் ஆண்டில் ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.1 கோடியாக உயர்த்தப்பட்டது. பொருட்களுக்கான விலையேற்றம் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கான செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, ஆணையருக்கான powers-ஐ increase செய்தால் பணிகள் விரைவில் நடைபெறும் என்பதாலும், அரசின் ஒப்புதலுக்கு அனுப்பினால், பணிகளை தொடங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என்பதாலும்

ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பை உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பு ரூ.1 கோடியாக நிர்யணயிக்கப்பட்டுள்ளதா?

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: தற்போது ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பு ரூ.2 கோடியாக திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இணை ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பு தற்போது ரூ.25 இலட்சமாக உள்ளது.

முனைவர் (திருமதி) தாரகை கட்பட்: அதை மேலும் உயர்த்தி வழங்கலாம்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: தற்போது ஆணையருக்கான மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பை ரூ.2 கோடியாக உயர்த்தியிருப்பதாக தெரிவித்துள்ளீர்கள். எந்த தேதியிலிருந்து உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது?

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: சென்ற ஆண்டு மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பு உயர்த்தப்பட்டுள்ளது.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: மதிப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டது குறித்து அரசாணை ஏதும் வெளியிடப்பட்டுள்ளதா? அந்த அரசாணை சட்டமன்றப் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளதா?

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: அதுகுறித்து check செய்து கூறுகிறோம்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: அரசாணை (நிலை) எண் 306, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-2) துறை, நாள் 6-9-2024-ல் மதிப்பீட்டுத் தொகை உச்சவரம்பை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை வெளியிடப்பட்டு இன்றுடன் 1 வருடம் 20 நாட்கள் ஆகிறது. இருந்தும் இவ்வறிவிக்கை சட்டமன்றத்தில் place செய்யப்படவில்லை. Secretariat Office Manual-ன் பத்தி 156-ல் தெரிவித்துள்ளவாறு சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட வேண்டிய அனைத்து அறிவிக்கைகளும் அரசிதழில் வெளியிடப்பட்டவுடன் ஆறு மாத காலத்திற்குள் வைக்கப்பட வேண்டும்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: ஒரு வருட காலமாக ஏன் Assembly-ல் place செய்யவில்லை?

தலைவர்: அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டவுடன் ஆறு மாதங்களுக்குள் சட்டமன்றத்தில் வைக்கப்பட வேண்டும்.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: தற்போது நடைபெறவுள்ள Assembly session-ல் place செய்துவிடுகிறோம்.

The Committee recommended that the Notifications should be placed before the Assembly within 6 months from the date of issue of Notification.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: இக்குறிப்பாணையில் 'Management and preservation of properties of Religious Institutions Rules' என்றுள்ளது. பொதுவாக Principal rule இருந்தால் அது எந்த வருடம் நடைமுறைக்கு வந்தது என்று Rule-ன் தலைப்பில் குறிப்பிடப்பட வேண்டுமல்லவா?

அரசு துணைச் செயலாளர், சட்டத் துறை: Principal rule–க்கான வருடம் Rule–ன் title-லிலேயே சேர்க்கப்படாமல் உள்ளது.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: Principal rule-க்கான வருடம் 1959. Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959-ல்தான் changes கொண்டுவந்துள்ளோம்.

துணைச் செயலாளர், சட்டமன்றம்: Management and Preservation of Properties of Religious Institutions Rules 1963-ல் frame செய்யப்பட்டன. கண்டிப்பாக எந்த ஆண்டு அந்த rules frame செய்யப்பட்டன என்று title–ல் குறிப்பிடப்பட வேண்டும். அப்போதுதான் அது எந்த ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வருகிறது என்பது தெரியும். இந்து சமய அறநிலையத் துறை சார்ந்த சட்டங்களின்கீழ் வரையறுக்கப்படும் பெரும்பான்மையான விதிகளில் ஆண்டு குறிப்பிடப்படாமல் இருக்கிறது.

தலைவர்: நீங்கள் அதை include செய்யுங்கள்.

அரசு கூடுதல் செயலாளர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை: இனி வருங்காலங்களில் சரியாக செய்கிறோம்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: பொதுவாக இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் நிறைய நிலங்கள் இருக்கின்றன. சில கிராமங்களில் அத்தகைய பொதுவான இடங்களில் அரசு கட்டடங்கள் கட்ட உங்கள் துறையிலிருந்து NOC பெற மக்கள் சிரமப்படுகிறார்கள். அந்த இடத்தை வைத்து நீங்கள் என்ன

செய்யப்போகிறீர்கள்? மக்கள் வந்து வழிபட்டால்தான் அது கோயில். உதாரணத்திற்கு, பூந்தமல்லி ப்ளாக்கில் நேமம் கிராமத்தில் பிடாரியம்மன் கோயில் இருக்கிறது. Coca Cola நிறுவனம் அந்த நிலத்தின் நீரையெல்லாம் உறிஞ்சி எடுத்து பயன்படுத்தியது. ஒரு மண்டபம் கட்ட CSR fund ஆக ரூ.1½ கோடி கொடுத்தார்கள். அந்த தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு ஒரு மண்டபம் கட்ட ஆறு மாதங்களுக்கு முயற்சி செய்தார். ஆனாலும், NOC கிடைக்கவில்லை. அவ்வாறு கட்டினாலும் அந்தக் கட்டடம் துறைக்கு சொந்தமானது என்று சொல்கிறீர்கள். இதற்கான தீர்வு என்ன? அரசாங்க இடமாக இருந்தால் நீர்நிலை புறம்போக்கிலோ, மேய்க்கால் புறம்போக்கிலோ கட்ட முடியாது. விவசாயம் செய்வதற்கும், commercial purposes–க்கும் lease-க்குக் கொடுக்கிறீர்கள். அதுபோன்றாவது மக்கள் பயன்பாட்டிற்கென கொடுக்கலாம். இதுபோன்ற கோயில் இடத்தை வைத்து நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? வாடகைக்கு விட்டு வருமானத்தைப் பெருக்குகிறீர்கள் என்பது மகிழ்ச்சியான விஷயம் தான். ஆனால், இதுபோன்ற பொது காரியங்களுக்கு ஏன் இடத்தை கொடுக்க மறுக்கிறீர்கள்?

தலைவர்: இதற்கான சட்டத் திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் தான் முன்னெடுத்து செய்ய வேண்டும்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: குழு இதற்காக பரிந்துரை செய்ய வேண்டுமென்பதுதான் என்னுடைய கருத்து. இந்த issue பற்றி நான் ஆணையர் திரு. ஸ்ரீதர், இ.ஆ.ப. அவர்களிடம் பேசியிருக்கிறேன். அவரிடம் நானும், முன்னாள்

நாடாளுமன்ற உறுப்பினரும் 2, 3 முறைகள் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுதான் எனது வருத்தம்.

தலைவர்: கல்வி நிலையங்கள் அமைப்பதற்கோ, மருத்துவத் துறையின் பயன்பாட்டிற்கோ கோயில் நிலங்களை lease-க்கு கொடுப்பது குறித்த guidelines எதுவும் துறைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: அவ்வாறு ஏதும் இல்லை.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: 2007–ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது பேருந்து நிலையம் கட்டுவதற்காக பூந்தமல்லியில் உள்ள வரதராஜ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தை உள்ளாட்சித் துறை விலைக்கு வாங்கியது. அதன் தற்போதைய நிலை என்ன?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: மூன்று அல்லது ஐந்தாண்டுகளுக்கு lease விடுவதற்குத்தான் இணை ஆணையருக்கு அதிகாரம் இருக்கிறது. அதுவும் நஞ்சை அல்லது புஞ்சை நிலத்தைதான் கொடுக்கலாம்.

தலைவர்: நீங்கள் சொல்வது, விவசாயம் மேற்கொள்வதற்காகக் கொடுப்பது. நான் கேட்பது, இன்னொரு அரசு துறைக்கு கொடுக்கலாமா என்பதைத்தான்.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: அவ்வாறு கொடுப்பதில்லை.

தலைவர்: கட்டடம் கட்டுவதற்கு rental basis-ல் கொடுக்கிறீர்களா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: ஏற்கெனவே கட்டடம் இருந்தால் rental basis–ல் கொடுக்கிறோம். புதிதாக கட்டுவதற்கு NOC கொடுப்பதில்லை.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: தரவாடகைக்கு கொடுக்கிறார்கள். Permanent ஆகக் கொடுப்பதில்லை.

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: கடந்த வாரம் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்தது. அதில் கோயில் premises-ல் கல்யாண மண்டபம், வணிக கடைகள் எதுவும் கட்டக்கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது.

தலைவர்: கல்வி நிலையங்களுக்கோ, மருத்துவத் துறைக்கோ உங்கள் துறை சார்பாக கோயில் நிலத்தைக் கொடுத்திருக்கிறீர்களா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: அவ்வாறு கோரிக்கை வந்தால் நாங்கள் அதை ஆணையருக்கு அனுப்புவோம்.

தலைவர்: ஆணையருக்கு அனுப்புவீர்கள் என்பது சரி. உங்கள் கட்டுப்பாட்டின்கீழ் வரும் பகுதியில் அவ்வாறு நிலம் கொடுத்திருக்கிறீர்களா?

இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை, கோயம்புத்தூர்: இல்லை. ஏனென்றால், கள்ளக்குறிச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்டும்போது ஒரு சமூக ஆர்வலர் வழக்கு தொடர்ந்ததையடுத்து அந்த அலுவலகம் இன்னமும் திறக்கப்படாமல் இருக்கிறது. அதற்குப் பின் நாங்கள் எதற்கும் அனுமதி கொடுப்பதில்லை.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: எங்கள் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலம் நிறைய இருக்கிறது. அந்த நிலத்தை

ஏன் பொது மக்களின் பயன்பாட்டிற்கு நீங்கள் கொடுக்கக்கூடாது? நான் lease–க்கு கேட்கவில்லை. உதாரணத்திற்கு, கலைஞர் கனவு இல்லத்தின்கீழ் வீடுகள் கட்டுவதற்கு இடம் இல்லாததால் அடுத்த மாவட்டத்திற்கு நாங்கள் அனுப்பிவிடுகிறோம். அதற்கு பதிலாக ஏன் உங்கள் துறையின் இடத்தை மக்களுக்குக் கொடுக்கக்கூடாது?

தலைவர்: இதுகுறித்து நாம் பேரவையில் பேசினால்தான் தீர்வு கிடைக்கும்.

No modification was recommended.

தலைவர்: அருப்புக்கோட்டையில் மருத்துவமனை கட்ட நான்கு ஆண்டுகளாக அலைகிறார்கள். ஆனால், இந்து சமய அறநிலையத் துறையின் NOC கிடைக்கவில்லை. மூன்று வருடங்களுக்கு முன்பே தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இன்று வரை கருத்துரு ஆணையரிடம் நிலுவையில் உள்ளது.

முனைவர் (திருமதி) தாரகை கத்பட்: மார்த்தாண்டவர்ம ராஜா வழங்கிய நிலத்தில் வீடுகட்ட அனுமதி வழங்க மறுக்கிறார்கள்.

தலைவர்: அரசாங்கத்திற்கே அனுமதி வழங்காதபோது வீடு கட்டுவதற்கு எவ்வாறு அனுமதி வழங்குவார்கள்.

அறநிலையத் துறையின் நிலத்தை disturb செய்யக் கூடாது; எந்த கட்டுமானமும் செய்யக் கூடாது. என்ன காரணத்திற்காக நிலம் வழங்கப்பட்டதோ அதனை நிறைவேற்றுவதற்குத்தான் அந்நிலம் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும். திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மர் எதற்காக அந்நிலத்தை வழங்கினார் என்று document-ல் பார்க்க வேண்டும்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: அரசர் வழங்கிய சொத்தை நீங்கள் அனுபவிக்கலாம், வேறு ஒன்றும் செய்ய முடியாது.

சார்புச் செயலாளர், சட்டமன்றம்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும், குழுக் கூட்டத்திற்கு வருகை தந்து விளக்கம் அளித்த சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அலுவலர்களுக்கு குழுவின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பின்னர், துறை அதிகாரிகள் விடைபெற்றுச் சென்றனர்.)

*****

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

COMMITTEE ON DELEGATED LEGISLATION

PROCEEDINGS OF THE MEETING

Thursday, the 22nd January, 2026

The Committee on Delegated Legislation met at 11-30 a.m. on Thursday, the 22nd January, 2026 in the Male Members' Lounge Room, Secretariat, Chennai-600 009.

The following Members were present:

CHAIRMAN

Hon'ble Thiru G.V. Markandayan

MEMBERS

Hon'ble Thiru S.R. Raja

Hon'ble Thiru Ka.So.Ka. Kannan

Hon'ble Thiru A. Krishnaswamy

Hon'ble Thiru N. Thiyagarajan

Hon'ble Dr. A.R.R. Raghuramon

Hon'ble Thiru S. Stalin Kumar

Hon'ble Thiru P. Arjunan

Hon'ble Thiru PR. Senthilnathan

Hon'ble Thiru E. Balasubramanian

Hon'ble Thiru E.M. Manraj

Hon'ble Dr. (Tmt.) Tharahai Cuthbert

LEGISLATIVE ASSEMBLY SECRETARIAT

Tmt. P. Thenmozhi - Joint Secretary

Thiru M. Udaiyarsamy - Deputy Secretary

Thiru. V. Manickam - Under Secretary

இணைச் செயலாளர்: மதிப்பிற்குரிய குழுத் தலைவர் அவர்களுக்கும் மற்றும் வருகை புரிந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழுவின் பதினெட்டாவது அறிக்கையின் (பதினாறாவது பேரவை) மீது உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நீலகிரி மாவட்டத்தில் சட்ட விதிகள் ஆய்வுக் குழு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் குறிப்பாணைகளை ஆய்வு செய்ததின் அடிப்படையில், 22–ஆவது வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இவ்வறிக்கையின்மீது குழுவின் ஒப்புதல் பெறும்பொருட்டு இன்றைய தினம் இக்கூட்டத்தைத் தலைவர் அவர்கள் கூட்டியுள்ளார்கள்.

தற்போது இக்கூட்டத்தைத் துவக்கி வைக்குமாறு மாண்புமிகு குழுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு வருகை தந்திருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. S.R. இராஜா அவர்களே, திரு. க.சொ.க. கண்ணன் அவர்களே, திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்களே, திரு. ந. தியாகராஜன் அவர்களே,

Dr. A.R.R. ரகுராமன் அவர்களே, திரு. செ. ஸ்டாலின் குமார் அவர்களே, திரு. பொ. அர்ஜுனன் அவர்களே, திரு. பெரி. செந்தில்நாதன் அவர்களே, திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்களே, திரு. இ.மா. மான்ராஜ் அவர்களே, முனைவர் (திருமதி) தாரகை கத்பட் அவர்களே, இணைச் செயலாளர் அவர்களே, துணைச் செயலாளர் அவர்களே, சார்புச் செயலாளர் அவர்களே மற்றும் அலுவலர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

துணைச் செயலாளர்: இன்றைய தினம், குழுவின் பதினெட்டாவது அறிக்கையின் (பதினாறாவது பேரவை) மீது உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை எடுத்த நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்ய வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மாண்புமிகு குழு உறுப்பினர்கள் அனைவரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

The Committee then took up for consideration the **Statement of Action Taken** by the Government on the Recommendation of the Committee contained in its **EIGHTEENTH REPORT (SIXTEENTH ASSEMBLY)**

Serial No. 1-Item No. 1 (i)

Notification issued under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

Amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981.

G.O. (Ms.) No. 33, Home, Prohibition and Excise (VIII) Department, dated 18.07.2023.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 2-Item No. 1 (ii)

Notifications issued under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

Amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1981.

G.O. (Ms.) No. 27, Home, Prohibition and Excise (VIII) Department, dated 06.08.2021.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 3-Item No. 1 (iii)

Notifications issued under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

Amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit Rules, 1981.)

G.O. (Ms.) No.9, Home, Prohibition and Excise (VIII) Department, dated 18.03.2023.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 4-Item No. 1 (iv)

Notification issued relating to Home, Prohibition and Excise Department.

G.O. (Ms.) No. 26, Home, Prohibition and Excise (III) Department, Dated 27.08.2019.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 5-Item No. 1 (v)

Notifications issued under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

Amendments to the Tamil Nadu Disposal of Articles (Confiscated under the Tamil Nadu Prohibition Act) Rules, 1979.

G.O. (Ms.) No.39, Home, Prohibition and Excise (VIII) Department, dated 22.10.2019.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 6-Item No. 1 (vi)

Notifications issued under the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937)

Amendments to the Tamil Nadu Liquor (Supply by Wholesale) Rules, 1983,

G.O. (Ms.) No. 35, Home, Prohibition and Excise (VIII) Department, dated 18.07.2023.

The Committee read and recorded the statement of action taken by the Government.

Serial No. 7-Item No. 2

The Narcotic Drugs and Psychotropic Substances Act, 1985

G.O. (Ms.) No.36, Home, Prohibition and Excise (XVI) Department, dated 18.07.2023.

The Committee read and recorded the statement of action taken by the Government.

துணைச் செயலாளர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவால் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட குறிப்பாணைகளின்மீது அளிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், குழுவின் 22–ஆவது வரைவு அறிக்கை தற்போது குழுவின்முன் ஒப்புதலுக்காக வைக்கப்படுகின்றன.

இவ்வறிக்கையை வெள்ளிக்கிழமை, 23–01–2026 அன்று பேரவையில் சமர்ப்பிப்பதற்கு குழுவின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

The Committee took up for consideration the **DRAFT REPORT (TWENTY SECOND) (16th Assembly)** of the Committee relating to rules and amendments to rules issued under the laws relating to The Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959)

After some discussion, the Committee approved the Draft Report without any modifications and authorised the Chairman to sign and present the Report to the Assembly on its behalf.

சார்புச் செயலாளர்: இக்கூட்டத்தை சிறப்பாக நடத்திய மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும், உறுப்பினர்கள் அனைவருக்கும், பேரவைச் செயலகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

The Committee, then, adjourned.

Dr. K. SRINIVASAN,
Principal Secretary.